சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.49/2021**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ம் நாள் வியாழக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.2**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பத் | தொழில் | பத்திர எழுத்தர் |
| தந்தை பெயர் | பொன்னுசாமி | ஜாதி | |
| கிராமம் | அம்மாபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 58 |

**26.02.2026 முதல் விசாரணை**

சாட்சிக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரத்தில் உள்ள ஆவணத்தை தயாரித்தவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.1ல் உள்ள என் கையொப்பம் **வா.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பூர்த்தி பைசல் ரசீதில் உள்ள ஆவணத்தை தயாரித்தவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.2ல் உள்ள என் கையொப்பம் **வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 கிரைய ஒப்பந்தத்தில் உள்ள ஆவணத்தை தயாரித்தவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.4ல் உள்ள என் கையொப்பம் **வா.சா.ஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15 உடன்படிக்கை ஒப்பந்தத்தில் உள்ள பத்திரம் எழுதியவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.15ல் உள்ள என் கையொப்பம் **வா.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.